# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1767 - 2012 ජූලි මස 13 වැනි සිකුරාදා - 2012.07.13**

*1767 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 738 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 740 |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 740 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 742 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, யூலை மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2011 இன் இல. 534

**தேசிய பயிளவல் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவியுயர்வு

2012, யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக மேஜர்களாக:

உ/3977 கப்ரின் பிஆர்டீ மெண்டிஸ்
உ/4519 கப்ரின் பீகேகே கங்கா
உ/5262 கப்ரின் கேஏபீ ரத்நாயக்க
உ/5682 கப்ரின் எஸ்எஸ்சீ ஆரியநந்த
உ/5707 கப்ரின் டப்எஸ்என் விதான
உ/5922 கப்ரின் எம்ஜீஏ பிரியங்கர
உ/5925 கப்ரின் கேகேஓ ஜயதேவ
உ/5926 கப்ரின் எம்ஆர்பீ மாயதுன்ன

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2012.

7-306

---

2012 இன் இல. 535

டி/ஆர்எப்/ஆர்ஈசீர்/954/என்வை.

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
சேவை நீடிப்பு

இலங்கை கடற்படை நிரந்தர கடற்படையில் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் ஒரு வருட சேவை நீடிப்பு 2012, யூலை 12 ஆந் திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

ரியர் அத்மிரல் சமரசிங்க ஆரச்சிகே மக்ஸிமஸ் ஜயந்த பெரேரா, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டீசீ, பீஎஸ்சீ - இகப - என்வீஎக்ஸ் 0140

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2012, யூன் 14.

7-441

---

2012 இன் இல. 536

டி/ஏஎவ்/866.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் ஹேரத் முதியன்சேலாகே சிந்தக தேவேந்திர ஹேரத் (01892) இயக்கு வான்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, ஏப்பிறல்12.

7-307

---

2012 இன் இல. 537

டி/ஏஎவ்/866.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரின் அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ப்ளைட் லெப்டினன்ட் மஞ்சுல ரமேஷ் விஜேகுணசேகர (02602) தொ/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 27.

7-304

2012 இன் இல. 538

டி/ஏஎவ்/885.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ப்ளைட் லெப்டினன்ட் டிக்கமகே திலங்க சஜித் பெரேரா (02763) இல/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 27.

7-310

---

2012 இன் இல. 539

டி/ஏஎவ்/887.

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, யூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ப்ளைட் ஒபிசர் லொக்கு மரக்கலகே தினேஷ் லக்மால் (02766) மின்/பொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, யூலை 27.

7-309

---

2012 இன் இல. 540

டி/ஏஎவ்/865.

**இலங்கை தொண்டர் வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலிலிருக்கும் விதம் இலங்கைத தொண்டர் வான்படையைச் சேர்ந்த பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

ஸ்கொட்ரன் லீடர் கமகே தர்ஷன் கமல் வீரசேன (தொ/0201) மருத்துவம்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, ஏப்பிறல் 12.

7-308

---

2012 இன் இல. 541

டி/ஏஎவ்/863.

**இலங்கை தொண்டர் வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல்

2011, மாச்சு மாதம் 10 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தரை அதிகாரவாணையிலிருந்து இராஜினாமா செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

| பதவி நிலை | முழுப்பெயர் | பிரிவு |
|---|---|---|
| ப்ளயிங் ஒபீசர் | டிகிரியாதுர ரவீந்திர சொய்சா (மி/0448) | பிரதான பொதுக் கடமைகள் |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு.

பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் அமைச்சு,
கொழும்பு,
2011, மாச்சு 27.

7-303

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

*2012 இன் இல. 542*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:*

*இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டீ. எல். பி. ஆர். அபயரத்ன அவர்கள் 2012, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பதில் அஞ்சல் மா அதிபராக.*

*7-438/1*

---

*2012 இன் இல. 543*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:*

*இலங்கை மதிப்பாளர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. சந்திரசேகரம் அவர்கள் 2012, மாச்சு மாதம் 27 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பிரதான அரசாங்க மதிப்பாளராக.*

*7-438/2*

---

*2012 இன் இல. 544*

*அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது:*

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எம். ஏ. எஸ். வீரசிங்க அவர்கள் 2012, மே மாதம் 14 ஆந்திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகமாக.*

*7-438/3*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

*எமது இல. : பிஎம் 11/02/20/2012/පිටු /ஸ.*

### காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

*1. கீழ்க்குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.*

*2. 2012.07.13 ஆந் திகதி தொடக்கம் 2012.07.27 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு குருநாகல் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.*

*3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு, எழுத்துமூலம் 2012.08.03 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.*

**அட்டவணை**

| *பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள்* | *காணியின் விபரங்கள்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்* |
|---|---|---|
| குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் காணிப் பதிவகத்தில் 'D' எனும் பிரிவில் 1319 ஆம் காண்டத் தில் 147ஆம் இலக்க ஏடு. | வடமேல் மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தின் வல்கம்பற்று கோறளையில் தேவமெதி ஹத்பற்றுவில் கெலிமுனே இல் அமைந் துள்ள கெலிமுனே வத்த என்னும் காணியின் 03 ஆம் இலக்க காணித் துண்டிற்கு எச். பி. ஹேரத் நிலஅளவீட்டாளரின் 2007.06.25 ஆந் திகதிய 06/07 ஆம் இலக்க அளவீட்டின் பிரகாரம் எல்லைகள் -<br><br>வடகிழக்கு மற்றும் கிழக்கு : அதன் 06/07 ஆம் அளவீட்டின் காணித்துண்டு இலக் கம் 02;<br>தெற்கு : புத்தளம் வீதி தொடக்கம் மங்குரு ஓயவுக்கு செல்லும் பிரதேச சபை வீதி;<br>மேற்கு : அதிகாரம் பெற்ற நிலஅளவீட்டாளரன் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேகர அவர்களின் இலக்கம் 481A/ P மற்றும் 1978.12.04 ஆந் திகதிய அளவீட் டின் காணித்துண்டு இலக்கம் 06, 09 மற்றும் அம்பகஹாமுல்ல பகுதி;<br>வடமேற்கு : அம்பகஹாமுல்ல பகுதி மற்றும் பின்வயல்.<br><br>பரிமாணம் : 0ஏ. 02று. 20.675பே. | 1. கே. ஏ. கித்சிறி பி. நொ. ஆல். சான்றுப் படுத்தப்பட்ட 2007.11.05 ஆந் திகதிய 1152 ஆம் இலக்க பிரதிக்கிளை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

7-375

---

**1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, மனிதவலு உபயோகிப்பு குறைநிரப்பு படைச்சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மனிதவலு உபயோகிப்பு படைச் சட்டத்தின் 37(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ்காணும் படைப்பிரிவை 2012, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து தேசிய மாணவப் படையணியின் படைப்பிரிவு ஒன்றாக மேம்படுத்தி நிறுவுதல் வேண்டுமென இத்தால் பரிந்துரைக்கின்றேன்.

22 ஆம் படைப்பிரிவு - தேசிய மாணவப் படையணி

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2012.

7-305

**யாத்திரிகைகள் கட்டளைச் சட்டம்**

மாத்தறை கன்னியாஸ்திரியர்கள் பள்ளியின் வருடாந்த உற்சவம்

மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தறை கன்னியாஸ்திரியர்கள் பள்ளியின் வருடாந்த திருவிழா உற்சவம் 2012, செத்தெம்பர் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை முதல் செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என்பதை (175 ஆம் அத்தியாயம்) யாத்திரிகைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 1991, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 687 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கடடளைகளின் 2 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகிறேன்.

பீ. ரணவீர,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை பிரதேச செயலாளர் அலுவலகம்,
2012.06.18.

7-259

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "டிரேட் பேஸ் லங்கா குரூப் ஒப் கம்பெனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.05.30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "டிரேட் பேஸ் லங்கா குரூப் ஒப் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது"டிரேட் பேஸ் லங்கா குரூப் ஒப் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 60102
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, யூன் 22.

7- 343

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "லைம் லைட் கம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.11.06 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "லைம் லைட் கம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "லைம் லைட் கம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 61953
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, யூன் 20.

7- 344

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "தாசிம் டிரவல்ஸ் என்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2007.09.21 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "தாசிம் டிரவல்ஸ் என்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "தாசிம் டிரவல்ஸ் என்ட் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 61479
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, யூன் 22.

7- 341

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

394 (3) ஆம் பிரிவின் கீழான "டீ பீ ஓ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" இன் பெயரை நீக்கி விடுவதற்கான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004.02.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட

"டீ பீ ஓ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

அவ்வாறு கலைக்கப்படாமல் இருப்பதற்கு தகுந்த காரணம் காட்டப் படாதவிடத்து இன்றைய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "டீ பீ ஓ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் பெயர், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394(3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெட்டியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பீவீ 8287
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2012, யூன் 22.

7- 342

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(ராகம கிளை) - கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

" கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடு உடையதாகவும், நைனயாக்கே முதியான்சேலாகே நுவான் சமந்த பண்டா மறுபெயர் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமாந்த பண்டார மற்றும் கொங்கானிகே மௌரி சந்திம கிருஷானி அந்தனி, அடகு வைத்தவர்களாகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்ட அடகு வைக்கப்பட்ட ஆதனம், கொழும்பு பிரசித்த நொத்தாரிசுகளான எஸ். எஸ். ஹலோலுவவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 2191 ஆம் இலக்க முறி, மற்றும் ஏ. எம். டி. ஏ. கே. அத்திக்காரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, ஒற்றோபர் 10 ஆந் திகதியிடப்பட்ட 355 ஆம் இலக்க முறி, என்பன கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட கடனை மீளப்பெறுவதற்காக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. ஸ்தாபனத்திற்கு பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

சொல்லப்பட்ட நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமந்த பண்டா மறுபெயர் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமாந்த பண்டார மற்றும் கொங்கானிகே மௌரி சந்திம கிருஷானி அந்தனி ஆகியோர், முன் சொல்லப்பட்ட கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் காரியாம்சமான உரிமையாளர்கள் மற்றும் அதனை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர்கள் என்பதுடன், முன்சொல்லப்பட்ட கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கிட்டத்தட்ட எல்லா பங்குகளையும், நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமந்த பண்டா மறுபெயர் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமாந்த பண்டார மற்றும் கொங்கானிகே மௌரி சந்திம கிருஷானி அந்தனி , கொண்டுள்ளனர் என்பதுடன், சொல்லப்பட்ட கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் இயக்குனர்களாகவும் திகழ்வதுடன், கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டை கட்டுப்பாட்டில் நிர்வகிப்பவர்களாகவும் செயல்படுவதுடன், அதற்கு இணங்க மேற்சொல்லப்பட்ட நைனயாக்கே முதியான்சேலாகே நுவான் சமந்த பண்டா மறுபெயர் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமந்த பண்டார மற்றும் கொங்கானிகே மௌரி சந்திம கிருஷானி அந்தனி ஆகியோர் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. இனால் கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு வழங்கப்பட்ட நிதிக் கடன் கொடுப்பனவின் மூலம், உண்மையிலேயே பயன் அடைபவர்கள்.

அத்துடன் கிராண்ட் அப்பாட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமந்த பண்டா மறுபெயர் நைனயாக்கே முதியான்சலாகே நுவான் சமந்த பண்டார மற்றும் கொங்கானிகே மௌரி சந்திம கிருஷானி அந்தனி ஆகியோர் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதுடன், 2012, பெப்புருவரி 29 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஐம்பத்து நான்கு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து நூற்று இருபத்தாறு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 54,62,126.78) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சொல்லப்பட்ட 2191 மற்றும் 355 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட 54,62,126.78 பணத்தொகையை 2012, மாச்சு 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், (ஆனால் கம்பஹா மாவட்ட பதிவுப் பிரிவிற்கு உட்பட்டது) கொழும்பு மாவட்டத்தில் உள்ள அளுத்குறு கோறளையின் ராகம் பற்றுவில் உள்ள ஜாஎல பிரதேச சபையின் ராகம ஒன்றியத்திற்கு உட்பட்ட ராகமவில் உள்ள ரீவத்த வீதியின் 87/ 16 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள தெல்கஹாவத்த மறுபெயர் அம்பகாஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே. வி. பெரேராவினால் தயாரிக்கப்பட்ட 26.01.1971 ஆந் திகதியிடப்பட்ட $1776^{A}$ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளம்

இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்படட காணியின் எல்லைகள் - வடக்கு : தற்போது விவியன் குணசேகரவின் பரம்பரையினருக்கும் ஏனையவர்களுக்குமான காணி ; கிழக்கு : காணித்துண்டு 2, ஆனால் மிகச் சரியாக தற்போது விவியன் குணசேகரவின் பரம்பரையினருக்கும் ஏனையவர்களுக்குமானது ; தெற்கு : கே. பி. சில்வாவின் அதே காணியின் காணித்துண்டு சி, ஆனால் மிகச் சரியாய காணித்துண்டு 4 ; மேற்கு : புகையிரத சேவைக்கான ஒதுக்கீட்டு காணி, ஆனால் மிகச் சரியாக காணித்துண்டு 2, அத்துடன் சொல்லப்பட்ட $1776^{A}$ ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், கம்பஹா மாவட்டக் காணிப் பதிவகத்தில் பி 495/207 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதினேழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

முன்சொல்லப்பட்ட ஆதனம், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நிலஅளவைக்கு அமைய பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் உள்ள அளுத்குறு கோறயின் ராகம் பற்றுவில் உள்ள ஜாஎல பிரதேச சபையின் ராகம ஒன்றியத்திற்கு உட்பட்ட ராகமவில் உள்ள ரீவத்த வீதியின் 87/16 வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ள தெல்கஹாவத்த மறுபெயர் அம்பகாஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. எல். பர்ணான்டோவினால் தயாரிக்கப்பட்ட 13.09.2007 ஆந் திகதியிடப்பட்ட 8253 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு $3^{A}$ என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்படட காணியின் எல்லைகள் - வடக்கு : டேவிட் சில்வாவிற்கு சொந்தமான காணி ; கிழக்கு : லீசன்ஸ் மருத்துவமனைக்கு சொந்தமான காணி ; தெற்கு : தனியார் வீதி ; மேற்கு : எம். சில்வாவிற்கு சொந்தமான காணி, அத்துடன் சொல்லப்பட்ட 8253 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், பதினேழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 17பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பி. எல். பர்ணான்டோவினால் தயாரிக்கப்பட்ட 13.09.2007 ஆந் திகதியிடப்பட்ட 8253 வரைபடத்தில் 27.09.2007 ஆந் திகதியிடப்பட்ட ஒப்புதல் குறிப்பான காணித்துண்டு எக்ஸ் என அடையாளம் இடப்பட்ட தனியார் வீதி மற்றும் ஏனைய உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரீ. ரணவீர,
பி.பொ.மு (சட்டம்) /சபைச் செயலாளர்.

7-408

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.